# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, சனவரி மாதம் 20 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 7.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

# 2006 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

*[2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச. வ. ஓ 5/2006*

***எதிர்பாராதவையும் அவசரமானவையுமான சூழ்நிலைகளின் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள குறித்தசில மாநகர சபைகளுக்கும் நகரசபைகளுக்கும் பிரதேச சபைகளுக்குமான தேர்தல்கள் பிற்போடப்பட்டுள்ள அத்தகைய சபைகள் தொடர்பில் புதிதாக நியமனப்பத்திரங்களைக் கோருவதற்கும், தேர்தல்களை நடத்துவதற்கும் ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கு மானவொரு சட்டம்***

*வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள எல்லா மாநகர சபைகள், நகர சபைகள் அத்துடன் பிரதேச சபைகள் தொடர்பிலும் நியமனப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும் என உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல் வெளியிடப்பட்டதனாலும் :* *முன்னுரை.*

*மூன்று மாநகர சபைகள், ஆறு நகர சபைகள், நாற்பத்திநாலு பிரதேச சபைகள் தொடர்பில் நியமனங்கள் பெறப்பட்டு, ஏழு பிரதேச சபைகள் தொடர்பில் நியமனங்கள் பெறப்படவில்லையாதலாலும் :*

*மேற்படி சபைகளுள் மூன்று மாநகர சபைகள், ஆறு நகர சபைகள் அத்துடன் ஐம்பத்தொரு பிரதேச சபைகள் தொடர்பில் தேர்தல் களுக்குப் போட்டியிடப்பட்டனவாதலாலும், அத்துடன் இந்த மாநகர சபைகளுக்கும் நகர சபைகளுக்கும் பிரதேச சபைகளுக்கும் தேர்தல்களுக்கான வாக்கெடுப்புத் தேதி அந்தந்தச் சபைகள் தொடர்பில் உள்ளூரதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தல் கள்மூலம் 2002, மாச்சு 25 ஆம் திகதிக்கு நிர்ணயிக்கப்பட்டது ஆதலாலும் :*

*மேற்கூறப்பட்ட மூன்று மாநகர சபைகளுக்கும் ஆறு நகர சபைகளுக்கும் அத்துடன் ஐம்பத்தொரு பிரதேச சபைகளுக்கும் தேர்தல்கள் நடாத்துவதற்கென நிர்ணயிக்கப்பட்ட வாக்கெடுப்புத் தேதிகள் அவசரமானவையும், எதிர்பாராதவையுமான சூழ்நிலைகளின் காரணமாக உள்ளூர் அதிகாரசபைகள்*

2 - PL 000930 –1,250 (2006/01)

தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகள்மூலம் காலத்துக்குக் காலம் பிற்போடப்பட்டனவாதலாலும் :

தங்கள் நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பித்துள்ள ஆட்கள் ஒன்றில் இறந்துள்ளனராதலாலும் அன்றேல் புலம்பெயர்ந்துள்ளாராதலாலும் அல்லது தங்கள் கட்சியை மாற்றியிருப்பதனாலும் அல்லது தங்கள் பெயர் குறித்த நியமனங்களைச் சமர்ப்பித்துள்ள ஆட்களுள் கணிசமான நியமனங்களைச் சமர்ப்பித்துள்ள ஆட்கள் வெளிநாடு சென்றுள்ளனர் என்ற நிகழ்வின் காரணமாக அல்லது நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நேரத்தில் முப்பத்தைந்து வயதுக்குக் குறைவாயிருந்த ஆட்கள் இப்பொழுது முப்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்களாயிருக்குமிடத்து மேற்சொல்லப்பட்ட மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் தொடர்பில் புதிய நியமனப்பத்திரங்களைக் கோருவதற்கு ஏற்பாடு செய்வது அவசியமாகியுள்ளது ஆதலாலும் :

மேற்கூறப்பட்ட மூன்று மாநகர சபைகள், ஆறு நகர சபைகள் அத்துடன் ஐம்பத்தொரு பிரதேச சபைகள் தொடர்பில் நியமனங்கள் சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து காலப்பகுதி காலாவதியாகி விட்டதன் காரணமாக அத்தகைய மாநகர சபைகள், நகரசபைகள் அத்துடன் பிரதேச சபைகள் தொடர்பில் புதிதாக நியமனங்களைக் கோருவதற்கும், அத்தகைய சபைகள் தொடர்பில் புதிதாகத் தேர்தல்கள் நடாத்துவதற்கும் ஏற்பாடு செய்தல் அவசியமாகியுள்ளதாதலாலும் :

ஆகவே, இப்போது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம். 2006 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*குறித்த சபைக்கான தேர்தல்கள் தொடர்பில் நியமனப் பத்திரங்களுக் கான வைப்பீடுகள் தொடர்பான ஏற்பாடுகள்.*

**2.** (1) கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப் பட்ட அறிவித்தல்களின் விளைசெயலாக அட்டவணைகள் I, II அத்துடன் III இல் குறித்துரைக்கப்பட்ட மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் தொடர்பில் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரங்கள் வலுவும் பயனும் அற்றதாகவும் அத்துடன் அத்தகைய நியமனப்பத் திரங்கள் ஒருபோதும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றாற்போன்றும் இத்தால் கருதப்படுகின்றன.

(2) அட்டவணைகள் I, II அத்துடன் III இல் குறித்துரைக் கப்பட்ட மாநகர சபைகளுக்கான நகர சபைகளுக்கான அத்துடன் பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் இத்தால் ஒழிக்கப்படு கின்றன.

(3) அட்டவணைகள் I, II அத்துடன் III இல் குறித்துரைக் கப்பட்ட எவையேனும் மாநகர சபைகளுக்கான, நகர சபை களுக்கான அல்லது பிரதேச சபைகளுக்கான தேர்தலுக்கென சுயேச்சைக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர் கள் தொடர்பில் கட்டளைச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட வைப்பீடுகள், கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் முரணாக எது எவ்வாறிருப்பினும், வைப்பீடு எவ்வாளினால் செய்யப்பட்டதோ அவ்வாள், கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் அவ்வாளுக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டைக் காண்பிப்பதன்மீது, வைப்பீட்டுத் தேதியில் இருந்து மீளளிக்கப்படும் தேதி வரையில் அத்தகைய வைப்பீட்டின்மீது ஆண்டொன்றுக்கு பன்னிரெண்டு சதவீதப்படியான வட்டியுடன் சேர்த்து அவ்வாளுக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

*தேர்தல்கள் நடத்துவதற்கான நடவடிக்கை களைத் தொடங்குதல்.*

**3.** அட்டவணைகள் I, II அத்துடன் III இல் குறித்துரைக்கப்பட்ட மாநகர சபைகளுக்கும், நகர சபைகளுக்கும் அத்துடன் பிரதேச சபைகளுக்குமான தேர்தல்களை நடாத்துவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் தொடங்கப்படுதல் வேண்டும் :

ஆயின், கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி நியமனங்கள் பற்றிய அறிவித்தலானது, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய தேதி யன்று வெளியிடப்படுதல் வேண்டும். அத்தேதி எவ்வாறாயினும், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து ஆறு மாதங் களுக்குப் பிந்தாததாயிருத்தல் வேண்டும்.

பொருள்கோடல்.

**4.** இச்சட்டத்தில் "கட்டளைச் சட்டம்" என்பது உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262) என்று பொருள்படும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அட்டவணை I

**மாநகர சபைகள்**

1. மட்டக்களப்பு மாநகர சபை
2. யாழ்ப்பாணம் மாநகர சபை
3. கல்முனை மாநகர சபை

அட்டவணை II

**நகர சபைகள்**

1. காத்தான்குடி நகர சபை
2. சாவகச்சேரி நகர சபை
3. பருத்தித்துறை நகர சபை
4. வல்வெட்டித்துறை நகர சபை
5. திருகோணமலை நகர சபை
6. வவுனியா நகர சபை

அட்டவணை III

**பிரதேச சபைகள்**

1. நிந்தவூர் பிரதேச சபை
2. சம்மாந்துறை பிரதேச சபை
3. அட்டாளைச்சேனை பிரதேச சபை
4. அக்கறைப்பற்று பிரதேச சபை
5. பொத்துவில் பிரதேச சபை
6. திருக்கோவில் பிரதேச சபை
7. கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை
8. கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை
9. கோறளைப்பற்று பிரதேச சபை

10. ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை
11. மண்முனை மேற்கு பிரதேச சபை
12. மண்முனைப்பற்று பிரதேச சபை
13. மண்முனை தெற்கு எருவில்பற்று பிரதேச சபை
14. மண்முனைப்பற்று தென்மேற்கு பிரதேச சபை
15. நகர, சூழல் பிரதேச சபை
16. குச்சவெளி பிரதேச சபை
17. தம்பலகாமம் பிரதேச சபை
18. கிண்ணியா பிரதேச சபை
19. மூதூர் பிரதேச சபை
20. கந்தளாய் பிரதேச சபை
21. கோமரன்கடவலை பிரதேச சபை
22. மொரவெவ பிரதேச சபை
23. பதவிசிறிபுர பிரதேச சபை
24. சேருவில பிரதேச சபை
25. சாவகச்சேரி பிரதேச சபை
26. நெடுந்தீவு பிரதேச சபை
27. வேலணை பிரதேச சபை
28. ஊர்காவற்றுறை பிரதேச சபை
29. வலிகாமம் மேற்கு பிரதேச சபை
30. வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
31. வலிகாமம் தெற்கு பிரதேச சபை
32. வலிகாமம் வடக்கு பிரதேச சபை
33. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
34. வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை
35. பருத்தித்துறை பிரதேச சபை
36. நல்லூர் பிரதேச சபை
37. வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
38. வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை
39. வவுனியா வடக்கு பிரதேச சபை
40. வெண்கலச் செட்டிக்குளம் பிரதேச சபை
41. மன்னார் பிரதேச சபை
42. மாந்தை மேற்கு பிரதேச சபை
43. நானாட்டான் பிரதேச சபை
44. முசலி பிரதேச சபை
45. கடற்துறைப்பற்று பிரதேச சபை
46. புதுக்குடியிருப்பு பிரதேச சபை
47. துணுக்காய் பிரதேச சபை
48. மாந்தை கிழக்கு பிரதேச சபை
49. கரைச்சி பிரதேச சபை
50. பூநகரி பிரதேச சபை
51. பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*